1994 ஏப்ரல் 27]

இந்த மூலக்கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு துணைக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும், நேற்று என்னுடைய துறையினுடைய மானியக் கோரிக்கையிலே இதுபற்றித் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின் பேரிலே, இன்றைக்கு நீர் ஆதாரம் இல்லாமல் இருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சுமார் 2175 என்று தமிழகத்திலே கணக்கு எடுக்கப்பட்டு, அதற்காக இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் நிரந்தர நீர் ஆதாரம் பெறுகிற அளவிலே, இந்த ஆண்டு மட்டும் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற அந்தக் கிராமங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 419, திரு எஸ். ஆசைமணி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

419—

மயிலாடுதுறை தாலுகா, மேல அகலங்கண் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்குக் குடியிருப்பு மனைப்பட்டா வழங்குதல்.

** 23092—திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தாலுகா, மேல அகலங்கண் கிராமம், மேல் ஆதிதிராவிடர் தெருவில் வசிப்பவர்களுக்கு "இலவச குடியிருப்பு மனைப்பட்டா" வழங்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள மேல அகலங்கண் கிராமத்தில் நீண்டகாலமாக மேல் ஆதிதிராவிடர் தெருவில் வசிக்கின்ற ஆதிதிராவிடர்களுக்கு கூடிய விரைவில் இலவச குடியிருப்பு மனைப் பட்டாவினை வழங்க வேண்டும். நம்முடைய போற்றுதலுக்குரிய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அவர்களுக்கு

காலனி வீடுகள் கிடைப்பதற்கு, இந்தப் பட்டா இருந்தால் போதும் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விரைவில் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மேல அகலங்கண் கிராமத்திற்கு, மயிலாடுதுறை தனி வட்டாட்சியர் மூலமாக கோப்புகள் கோரப்பட்டு இருக்கின்றன. அவர்கள் இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக 4 (1) கோப்புகளை அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கோப்புகள் வந்தவுடன் அரசு மூலம் நடவடிக்கை எடுத்து அந்த ஊருக்கு மனைப்பட்டா வழங்கப்படும். காயிதே மில்லத் மாவட்டத்திற்கு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 6,074 பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்ற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

407—

கொடுமுடி பேரூராட்சியில் "டான்வா" திட்டம் மூலம் மகளிருக்குப் பயிற்சி முகாம் ஏற்படுத்துதல்

**26656—திருமதி கவிநிலவு தர்மராஜ்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடி பேரூராட்சியில் "டான்வா" திட்டம் மூலம் மகளிருக்குப் பயிற்சி முகாம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

டான்வா திட்டத்தின் கீழ் பண்ணை மகளிருக்கான பயிற்சி பெரியார் மாவட்டத்தில் 1994-95 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த கொடுமுடி பேரூராட்சியிலும் இத்திட்டம் 1994-95 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.